# காயக சிகாமணி, சங்கீத கலாநிதி
# ஹரிகேசநல்லூர் டாக்டர் எல். முத்தையா பாகவதர்
# (1877-1945)

சங்கீத தேவதைகளுடையவும் மும்மூர்த்திகளுடையவும் ஸாக்ஷாத் ஸரஸ்வதி தேவியின் பரிபூர்ண அனுக்ரஹமும் கிடைக்கப்பெற்றவரும் மதிப்பிற்குரியவும் என் அன்பிற்குறியவருமான என் தாத்தா ஸ்ரீ முத்தைய்யா பாகவதர் அவர்களைப்பற்றி அறியாதவர்கள் யாரும் சங்கீத உலகத்தில் இருக்கமாட்டார்கள். ஸ்ரீ பாகவதர் அவர்கள் 1877 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் தேதி புனல்வேலி கிராமத்தில் ஸ்ரீ. லிங்கம் ஐயருடையவும் ஸ்ரீமதி ஆனந்தவல்லி அம்மாளுடையவும் மகனாகப் பிறந்தார். தகப்பனார் லிங்கம் ஐயரும் ஒரு சங்கீத வித்வானாக இருந்தார். தாயார், ஆனந்தவல்லி அம்மாளும் ஞானபாவத்தோடு பாடுபவராக இருந்தார். பாகவதருடைய தாத்தா ஸ்ரீ முத்துசுப்பபாரதி வேதாந்த நாடகங்களும், கீர்த்தனங்களும் இயற்றுபவராக இருந்தார். பாகவதருடையை மைத்துனன் முத்துசுப்பைய்யர் பிரபலமான தமிழ் பதங்கள் இயற்றுபவராக திகழ்ந்தார். சுருக்கமாக கூறினால் குடும்பம் முழுவதும் சங்கீதமயமாக இருந்தது என்று புரிகிறது. 7-வது வயதில் பாகவதர் தனது தந்தையை இழந்தார். பிறகு தாய்மாமா மஹாமஹோபாத்யாய ஸ்ரீ லக்ஷ்மண சூரி அவர்களுடன் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஹரிகேசநல்லூர் என்ற ஊரில் குடியேறினார். 9-வது வயதில் மஹாவைத்யநாதய்யருடைய சிஷ்யரான ஸ்ரீ சாம்பசிவ ஐயர் அவர்களிடம் சங்கீதம் கற்க ஆரம்பித்தார். அத்துடன் வேத அத்யயனமும் தெலுங்கு, சம்ஸ்கிருதம், கன்னடம், தமிழ், கிரந்தம் முதலிய பாஷைகளிலும் தேர்ச்சி பெற்றார்.

**17-வது வயது:**

17-வது வயதில் தூத்துக்குடியில் முதல் கச்சேரி செய்தார். அந்தக் கச்சேரி மிகவும் நன்றாக பாடியதால் ஒரு தம்புராவை அவருக்கு பரிசாகக் கொடுத்தார்கள்.

**19-வது வயது:**

19-வது வயதில் மஹாராஜா ஸ்ரீமூலம்திருநாள் முன்பாக கச்சேரி செய்தார். அதற்கு 1000 ரூபாயும், தோடா, வீரச்ருங்கலா முதலியவை பரிசாக கொடுத்து ஆதரித்தார்கள். பாகவதர் அவர்கள் ஸ்ரீமதி சிவகாமி அம்மாளை பாணிக்ரஹணம் செய்தார். இந்த தம்பதிகளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் மிகவும் சிறிய வயதிலேயே வஸூரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டது. பாகவதர் அவர்களுக்கு காந்திமதி அம்மாள் என்ற மூத்த சகோதரியும், ஸ்ரீ ஹரிஹரன் என்ற இளைய சகோதரனும் உண்டு. ஸ்ரீ ஹரிஹரனுக்கு சங்கீதவித்தையையும், ஹரிகதை மற்றும் பிடில் வாசிக்கவும் கற்றுக்கொடுத்து தன்னுடனேயே சகோதரனையும் வைத்துக்கொண்டார். பிறகு அவருடைய சகோதரனின் மகனான ஸ்ரீ வைத்திய லிங்கத்தையே தத்துப்புத்திரனாக ஸ்வீகாரம் செய்துகொண்டார்.

ஆஜானுபாகுவான சரீர சௌந்தர்யம், சப்த காம்பீர்யம் (குரல்வளம்), பாஷா பாண்டித்யம் (மொழி ஞானம்), சங்கீத ஞானம், சங்கீத சாஸ்த்திரத்தைக் குறித்துள்ள அபார ஞானம் இவையெல்லாம் ஒன்று சேரக்கிடைத்த மஹாபாக்யவானாக விளங்கிய பாகவதர் அவர்கள் ஹரிகதா காலக்ஷேபம் செய்வதிலும் நிபுணராக திகழ்ந்தார். மஹாராஷ்ட்ராக் காரரான கிருஷ்ணபட், அப்பக்குடம் சாஸ்த்திரிகள் போன்ற மராத்தி சங்கீத வித்வான்களை வரவழைத்து மராட்டி கற்றுக்கொண்டு ஸாகி, திண்டி என்ற புதுமுறையை ஏற்படுத்தி ஹரிகதையில் புதுமையை புகுத்தினார்.

ஸதி சுலோசனா, வள்ளி கல்யாணம், தியாகராஜ சரித்திரம், திரௌபதி மான சம்ரக்ஷணம், கௌசல்யா கல்யாணம், துர்வாஸ பிக்ஷை, உஷா பரிணயம் முதலிய கதா காலக்ஷேபங்களை மக்கள் மிகவும் சந்தோஷத்தோடு விரும்பி ரசித்துக் கேட்டார்கள்.

## 1927

மைசூர் மஹாராஜா ஸ்ரீ கிருஷ்ணராஜேந்திர உடையார் சமக்ஷத்தில் ஸ்ரீ பாகவதர் கச்சேரி நிகழ்த்தினார். அந்தக் கச்சேரியைக் கேட்டு மிகவும் சந்தோஷமடைந்த மஹாராஜா ஸ்ரீ பாகவதர் அவர்களை மைசூர் சமஸ்த்தானத்தில் ஆஸ்தான வித்வானாக நியமித்தார். மஹாராஜா அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற ஸ்ரீ சாமுண்டேஸ்வரி அஷ்டோத்தர கீர்த்தனைகளை கன்னடபாஷையிலும், சிவாஷ்டோத்தர கீர்த்தனைகளை சம்ஸ்கிருத பாஷையிலும் இயற்றினார். இவைகளைத்தவிர ஸ்துதி கீர்த்தனைகள், தான வர்ணங்கள், பதவர்ணங்கள், தருவர்ணங்கள், வாரகீர்த்தனங்கள், கணபதி, முருகன், சரஸ்வதி, காளி முதலிய தெய்வங்களுடைய அனுக்கிரஹங்களை பற்றி துதித்து அனேகம் தமிழ் கீர்த்தனங்களும், இங்கிலீஷ் நோட்டுக்கள் முதலான 500 க்கும் மேலான கிருதிகளை இயற்றி சங்கீத உலகத்திற்கு மறக்கமுடியாத சம்பாவனைகளைச் செய்தார். இது தவிர ராகமாலிகை, தில்லானாக்கள், மேற்கிந்திய பாணியிலுள்ள கிருதிகளும், 23 புதிய ராகங்களையும் இயற்றியுள்ளார். அஷ்டோத்திர கிருதிகள் இயற்றியதில் பாகவதருடைய சங்கீத ஞானத்தின் திறமையைப் புகழ்ந்து மைசூர் மஹாராஜா அவர்கள் காயக சிகாமணி என்ற பட்டம் அளித்து கௌரவித்தார்கள்.

## 1929

ஸ்ரீ கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸ்ரீ ராகவன், ஸ்ரீ டி.வி. சுப்பராவு, ஸ்ரீ முத்தையா பாகவதர் போன்ற முக்கியப் பிரமுகர்கள் சேர்ந்து மதராஸ் மியூசிக் அகாடமி ஆரம்பித்து ஸ்ரீ பாகவதர் அவர்களை முதல் பிரசிடென்டாக நியமித்தார்கள். அங்கேயே அடுத்த இரண்டு வருடங்கள் தலைவராக பாகவதரே இருந்தார். மத்யான வேளையில் புகழ்பெற்ற சங்கீத வித்வான்கள் சேர்ந்து சங்கீதத்தைப்பற்றி சர்ச்சைகள் செய்யும் பொழுது ஸ்ரீ பாகவதர் அதில் தலைமை பதவி வகித்திருந்தார். இதேபோல் டி.டி.சி. யின் முதல் பிரின்சிப்பலாகவும் பாகவதர் நியமிக்கப்பட்டார்.

புதிய தலைமுறைகளை வார்த்தெடுப்பதற்காக பாகவதருடைய தலைமையில் மாலை வேளைகளில் கச்சேரிகள் நடத்தி வந்தார்கள். இந்த சம்பிரதாயம் தான் இன்று நாம் கண்டும் கேட்டும் அனுபவிக்கின்ற மியூசிக் அகாடமி கச்சேரி சீசனாக பிரபலம் அடைந்திருக்கிறது.

**1932**

மியூசிக் அகாடமி பாகவதருக்கு “சங்கீத கலாநிதி” என்ற பட்டம் அளித்து கௌரவித்தது.

**1934**

மஹாராஜா கார்த்திகை திருநாள் அவர்களுடைய பள்ளிக்கெட்டுத் திருவிழாவில் திருவாங்கூர் சரித்திரத்தை ஹரிகதாகாலக்ஷேபமாக நடத்துவதற்கு மஹாராணி திருமனஸ் அவர்கள் பாகவதருக்கு அழைப்பு அனுப்பி வரவழைத்தார்கள். “சித்ரோதயம்” என்ற பெயரில் பாகவதர் நடத்திய ஹரிகதையில் வைவஸ்வத மனு முதல் ஆரம்பித்து திருவிதாங்கூரை ஆட்சி செய்த மஹாராஜாக்களை வர்ணிக்கும் பொழுது ஸ்ரீ ஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களுடைய மிகப்பெரிய ஸம்பாவனைகளைக் குறித்து கூறும்பொழுது அவர் இயற்றிய இன்பமான சில கிருதிகளைப் பாடினார்கள். அதில் ஹம்சாநந்தி ராகத்தில் ஒரு தில்லானா அமைத்திருந்தார். அதன் சரணத்தில் “பத்மநாபதாஸ வஞ்சி பூபால பாலராமவர்ம பாக்ய ந்ருபாலா நித்ய சித்ரோதய நிர்மல சீலா நிஜ ஸங்கீத கலானுகூல” என்ற ஸாஹித்தியத்தை பாடினார்கள். இதைக்கேட்டு சந்தோஷமடைந்த மஹாராணி அவர்கள், ஸ்வாதிதிருநாள் கிருதிகளை சேகரித்து சரிப்படுத்தி புஸ்தகமாக பதிப்பிக்க வேண்டும் என்பதால் பாகவதரை ஆஸ்தான வித்வானாக நியமிக்க விரும்புவதாகக் கூறினார். தற்சமயம் மைசூர் ஆஸ்தான வித்வானாக இருப்பதால் சிறிது நாட்கள் திருவிதாங்கூரில் தங்கி இருந்து மேற்படி வேலைகளை ஏற்றெடுத்து செய்து தருவதாக வாக்களித்தார். அதன்படி பீளமேட்டிலும், கோல்ஃப் லிங்ஸிலும் பாகவதர் தங்குவதற்கான ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். மிகவும் சிரமப்பட்டு பல அம்ம வீடுகளிலும் (ராஜகுடும்ப உறவினர்கள் வசிக்குமிடம்) சென்று சாகித்யங்களை சேகரித்து மூன்று கட்டங்களாக சுவாதி கிருதிகளை சரிப்படுத்தினார்.

1) முதலாவதாக 75 கீர்த்தனைகளை ஸ்வரப்படுத்தி அவைககளை சரியாக்கி சிட்டப்படுத்தினார்.

2) இரண்டாவதாக 75 கிருதிகள், கல்யாணி, சங்கராபரணம் என்ற ராகங்களுடைய பெயர் எழுதியிருந்தாலும் ஸாகித்யம் மட்டும் இருந்தது. அவைகள் எல்லாற்றையும் சிட்டைப்படுத்தி, சங்கதிகள் சேர்த்து ஸ்வரப்படுத்தினார்.

3) மூன்றாவதாக 75 கீர்த்தனைகள் கறையான் அரித்து சாகித்யபங்கம் வந்தவை மட்டும் கிடைத்தது. இவைகளை மஹாராணியின் அனுமதியோடு ஹம்சா நந்தி, பூஷாவலி, சரஸ்வதி மனோகரி, குந்தளவராளி, மோகன கல்யாணி என்று மேளகர்த்தா ராகங்களிலும் அபூர்வ ராகங்களிலுமாக அமைத்து ஸ்வரப்படுத்தினார்.

ஸ்ரீ என்.வி. நாராயண பாகவதர், ஸ்ரீ வித்வான் ஸ்ரீனிவாசய்யர், ஸ்ரீ நெல்லை டி.வி. கிருஷ்ணமூர்த்தி என்ற மூன்று சிஷ்யர்கள் பாகவதர் சிட்டைப்படுத்திய கிருதிகளை ஸ்வரப்படுத்தி எழுதும் பணியைச் செய்தனர். ஒவ்வொரு கிருதியும் குறைந்தது 100

முறையாவது பாடி பாகவதருக்கு திருப்தியான பிறகு அதை அம்மை மஹாராணி முன் பாடி அவர்களுக்கும் திருப்தியான பிறகு மட்டுமே அச்சடிப்பதற்காக மாற்றி வைக்கப்பட்டது. ஒன்றாம் பாகம் சிட்டைப்படுத்திய பிறகு மீண்டும் மீண்டும் சில ராகங்களான பைரவி, சாவேரி, கல்யாணி, சங்கராபரணம் போன்ற ராகங்கள் வருவதை கவனித்த பாகவதர் அவைகளை மாற்றியமைக்க விரும்பி மேளகர்த்தா ராகங்களிலும் அபூர்வ ராகங்களிலும் மஹாராணியின் அனுமதி பெற்று மாற்றி அமைத்தார். முன் காலங்களில் முல்லமொட்டு பாகவதர்கள் மட்டுமே சோபான பாணியில் பாடியிருந்த கிருதிகளை மூன்று கட்டமாக இவர் சரிப்படுத்தினார். ஸ்வரப்படுத்தியவை கிடைக்காத தாலும் அதற்கு சங்கீதத்தின் அலங்காரங்களான சங்கதிகள், கமகங்கள் ஆகியவை சேர்த்து அழகாக சிட்டைப்படுத்தினார்.

சரஸ்வதி, மனோகரி, குந்தளவராளி, உமாபரணம், மோஹன கல்யாணி, ஹம்சானந்தி, வாசஸ்பதி முதலிய ராகத்திலுள்ள கிருதிகள் சில உதாரணங்கள் ஆகும். 1934 முதல் 1938 வரை முயற்சி செய்து மேற்படி காரியங்களை செய்து முடித்தார்.

ஸ்வாதிதிருநாள் கிருதிகளை ராஜகீயத்திலிருந்து சாதாரண ஜனங்களும் ரசிக்கும்படியாக கொண்டுவந்து பிரசாரம் செய்வதற்கு என்ன செய்யவேண்டும் என்ற மஹாராணியின் கேள்விக்கு ஸ்ரீ பாகவதர் இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டார்.

1) ஸ்ரீ ஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களின் பெயரில் ஒரு சங்கீத கலாநிலயம் ஆரம்பிக்க வேண்டும். அதில் படித்து வெற்றிப்பெற்ற மாணவ, மாணவிகளுக்கு அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் சங்கீத ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். 5 ரூபாய் மட்டுமே கட்டணமாக வசூலிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். 1939 முதல் 1999 ல் யூனிவேர்சிட்டி அபிலியேட் செய்வது வரையிலும் மஹாராணி பாகவதருக்கு கொடுத்த இந்த வாக்கை நிறைவேற்றினார்.

2) கச்சேரி செய்து புகழ்பெற்ற சங்கீத வித்வான்களை ஆஸ்தான வித்வான் களாக நியமிக்க வேண்டும். பாகவதருடைய கருத்துப்படி ஸ்ரீமான்மார்களான செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர், வடக்காஞ்சேரி மணிபாகவதர், கல்யாண கிருஷ்ண பாகவதர், முசிரி சுப்ரமண்ய அய்யர், ராஜமாணிக்கம் பிள்ளை, நாதஸ்வர வித்வான் வீருச்சாமி பிள்ளை, பாலக்காட்டு மணி அய்யர் முதலியவர்களை ஆஸ்தான வித்வான்களாக நியமித்தார்கள்.

**1939**

1939 ல் திருவனந்தபுரம் சுவாதிதிருநாள் அகாடமி அமைத்து ஸ்ரீ பாகவதரை முதல் பிரின்ஸிபலாக (ஹானரோரியம்) நியமித்தனர். தினமும் காலையில் இறைவணக்கம் பாடுவதற்கென்றே அனந்த பத்மநாபம் ஆஸ்ரயே என்ற ஆரபி ராக கிருதியை பாகவதர் அவர்கள் இயற்றினார்கள். இன்றும் திருவனந்தபுரம் ஸ்வாதிதிருநாள் சங்கீத அகாடமியில் இந்த இறைவணக்கப்பாடல் பாடிய பிறகுதான் வகுப்புக்கள் துவங்கும். 7 அடி உயரமும் அதற்குத் தகுந்த சரீர வடிவுமுள்ள பாகவதற்காகவே தனியாக ஒரு ஈசிசெயர் செய்து கொடுத்ததை இன்றும் அகாடமியில் காணலாம்.

முதல் காலகட்டத்தில் 2 பாகவதர்கள் நவராத்திரி மண்டபத்தில் ராகம் தானம் பல்லவி என்று மாறி மாறி பாடிக்கொண்டிருந்தார்கள். காலப்போக்கில் இது ஒரு பொறாமைப் போட்டியாக மாறுவதை புரிந்துகொண்ட பாகவதர் இன்று நாம் கண்டு ரசித்து வருகிற முறையில் நவராத்திரி மண்டபக் கச்சேரி ரூபத்தில் மாற்றி அமைத்தார்கள்.

**1942**

1942 ல் சிறிது உடம்பு சரியில்லாத காரணத்தால் பாகவதர் மைசூருக்கு திரும்பிச் செல்ல விரும்பினார். அதற்கு முன்பு ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யரை அடுத்த பிரின்சிப்பாலாக நியமிப்பதற்கு மஹாராணியிடம் சிபாரிசு செய்தார். சுவாதி திருநாள் கிருதிகளின் ஒன்றாம் பாகம் ஸ்ரீ முத்தையா பாகவதருடைய காலத்திலும் அடுத்த இரண்டு பாகங்கள் செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யருடைய காலத்திலும் அச்சடிக்கப்பட்டது.

அன்றைய திவானாக இருந்த சர்.சி.பி.ராமஸ்வாமி ஐயருடைய விருப்பத்தை ஏற்றுக்கொண்டு ‘‘சங்கீத கல்பத்ருமம்’’ என்ற சங்கீத சாஸ்த்திர நூலை தமிழ் பாஷையில் எழுதி சமர்ப்பித்த பாகவதர் அவர்களுக்கு, திருவிதாங்கூர் பல்கலைக்கழகம் டி.லிட் பட்டம் கொடுத்து கௌரவித்தது. இந்தியாவில் சங்கீதத்திற்கு முதன்முறையாக டி.லிட் பட்டம் பெற்ற மகான் என்ற பெருமையும் ஸ்ரீ பாகவதருக்கே சேரும்.

ஸ்ரீ நெல்லை டி.வி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பிரின்சிப்பாலாக இருந்த காலத்தில் இந்த தமிழ் நூலை ஸ்ரீ வெங்கிட சுப்ரமணி அய்யரை வைத்து மலையாள பாஷையில் மொழிபெயர்த்து கவர்மென்ட் பாஷா இன்ஸ்டிட்யூட் வெளியிட்டார்கள். ‘‘சங்கீத லக்ஷண சாரம்’’ என்று பெயருள்ள ஒரு சங்கீத சாஸ்த்திர கிரந்தமும் கூட ஸ்ரீ பாகவதர் அவர்கள் இயற்றி எழுதியிருக்கிறார்கள்.

பாகவதர் அவர்கள் சினிமா உலகத்திற்கும் ஏராளமான தொண்டுகளை செய்திருக்கிறார்கள். முன் காலங்களில் திரைப்படங்களில் வசனங்கள் இசை வடிவத்தில் அமைத்திருந்தார்கள். ஒரு திரைப்படத்தில் 35 அல்லது 36 பாட்டுக்கள் முதல் நூற்றுக் கணக்கான பாட்டுக்கள் வரை இயற்றப் பட்டிருந்தன. அந்த விதத்தில் ஸ்ரீ பாகவதர் இயற்றி உருவாக்கிய திரைப்படங்கள்.

1) சங்கீத லவகுச, 2) திருமங்கை ஆழ்வார், 3) ராதா கல்யாணம், 4) திருஞான சம்பந்தர். மேற்கூறிய திரைப்படங்களில் லவனாகவும், திருஞான சம்பந்தராகவும், கிருஷ்ணனாகவும், ஆழ்வாராகவும் நடித்தது ஸ்ரீ நெல்லை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தான். தில்லானா மோகனாம்பாள் என்ற சினிமாவில் சிக்கல் ஷண்முக சுந்தரம் நாதஸ்வரத்தில் வாசிப்பதாக வரும் காட்சியில் வெஸ்டேன் நோட்டு காமக ரிகபா ரிகஸா என்ற திச்ர நடயிலுள்ள இங்கிலீஷ் நோட் ஸ்ரீ பாகவதர் அவர்கள் இயற்றி வடிவமைத்த தாகும். பாகவதரால் நாதஸ்வரத்திற்கென்றே இயற்றப்பட்ட வள்ளிநாயகனே என்ற சண்முகப்ரியா ராகத்திலுள்ள கிருதியை வாசிக்காத நாதஸ்வர வித்வான்கள் கிடையாது.

தமிழ்நாட்டில் மதுரையில் ஸ்ரீ பாகவதர் அவர்கள் முதன்முதலில் ஒரு சங்கீதப் பள்ளிக்கூடம் ஆரம்பித்தார்கள். பிரபல சங்கீத வித்வான்களான ஸ்ரீ மதுரை மணி அய்யர்,

ஸ்ரீ சங்கர சிவம் ஆகியோர் இந்த பள்ளியில் தான் சங்கீதம் படித்தார்கள். ஸ்ரீ சங்கரசிவம் அவர்கள் தான் ஸ்ரீ டி.என்.சேஷகோபாலனுடைய குருநாதர் ஆவார்.

ஸ்ரீ முத்தைய்யா பாகவதர் அவர்கள் புதியதாக இயற்றிய 23 ராகங்களை சங்கீத உலகத்திற்கு சமர்ப்பித்துள்ளார். அவைகள்:

1) கௌடமல்லார்

2) விஜய நாகரி

3) கர்ணரஞ்சனி

4) ஹம்ஸானந்தி

5) குஹரஞ்சனி

6) பசுபதிப்ரியா

7) வீணாதாரி

8) நாகபூஷணி

9) மனோரமா

10) ஊர்மிகா

11) சாரங்கமல்லார்

12) மாயா ப்ரதீபம்

13) ஸுமனப்ரியா

14) விஜயசரஸ்வதி

15) புதமனோகரி

16) அலங்காரி

17) சக்ரப்ரதிபாதம்

18) கோகிலபூஷணி

19) ஹரிநாராயணி

20) ஹம்ஸதீபகம்

21) குருப்பிரியா

22) வலஜி

23) நீரோஷ்டா

அவர் இயற்றிய கிருதியில் நிர்+ஓஷ்டா என்ற ராகத்தில் ஸ்வரமும் ஸாஹித்யமும் பாடும்போது உதடுகள் இரண்டும் சேரக்கூடாது என்பதை கடைபிடித்திருக்கிறார்கள். ராஜ ராஜ ராஜிதே என்ற நீரோஷ்டா ராகக்ருதி மிகவும் பிரபலமானவை.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் நவக்ரஹ கிருதிகள் இயற்றிய பிறகு ஸ்ரீ முத்தையா பாகவதர் வாரக்கீர்த்தனங்கள் என்ற பெயரில் 7 நவக்கிரஹங்களுக்கு (ராகு கேது தவிர) கீர்த்தனம் இயற்றினார்.

ஸ்ரீ பாகவதர் கோட்டு வாத்தியம், வயலின், வீணை போன்ற வாத்தியங்கள் வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அவரது வாழ்நாள் முழுவதும் அவர் ஒரு மஹாராஜாவைப் போல் தேஜஸ்வீயாக வாழ்ந்தார்.

ஒரு கிருதியை சொந்தமாக இயற்றி, ஸ்வர சாகித்யங்கள் அமைத்து அந்தக் கிருதிக்கு மெட்டு அமைத்து, இயற்றியவரே பாடிக்காட்டும் திறமையுள்ள சங்கீத வித்வானை மட்டுமே "உத்தம வாக்யேயக்காரன்" என்று அழைக்க முடியும்.

ஸ்ரீ பாகவதருடைய உத்தம குணங்களையும், நல்ல மனதையும் பற்றிக்கூற நிறைய உதாரணங்களும் இருக்கிறது. கந்தஷஷ்டி உற்சவம் நடத்தி நிறைய சங்கீத வித்வான்களை கச்சேரி செய்ய வைத்து கைப்பிடித்து உயர்த்திக்கொண்டு வந்தார். அவர் அழைத்து வருத்திய சங்கீத வித்வான்களை நிறைந்த மனதுடன் தங்கவைத்து ஒரு பைசாக்கூட செலவு வைக்காமல் எல்லா சௌகர்யங்களும் செய்து கொடுத்து சன்மானம் அளித்து அனுப்பிவைப்பார். இன்று நாம் அறியப்படும் செம்பை வைத்தியநாத பாகவதர் என்ற பாலகனுக்கு சிறுவயதில் இந்த விழாவில் வயலின் வாசிப்பதற்கான வாய்ப்பளித்து அவரை ஊக்குவித்தார்.

பாகவதர் வாழ்ந்த கிராமமான ஹரிகேசநல்லூர் என்ற ஊரின் நினைவாக தன்னுடைய கிருதிகளில் ஹரிகேச என்ற முத்திரையை சேர்த்திருந்தார். இப்படிப்பட்ட மஹான் 1945 ல் ஸ்ரீ சாமுண்டேஸ்வரி தேவியுடைய பாதத்தில் ஐக்கியமானார்.

சங்கீதத்தை உபஜீவனமாக கொண்டுள்ளவர்கள் யாவரும் அம்மை மஹாராணிக்கும் ஸ்ரீ முத்தையா பாகவதருக்கும் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.